DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 242/2015 DW : 1

Name : செங்கல்ராஜு Age – 91

S/o : பாப்பாராஜா Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 23.01.2026

<u>வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

1) என் மனைவி 1ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்த சமயத்தில் நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. அப்போது என் மனைவிக்கு வயது சுமார் 70 வயது இருக்கும். அவர் தமிழ் எழுதப்படிக்க தெரியாது. பேசவும் தெரியாது. அவர் ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர். அவர் பேங்க் லோன் பெறுவதற்காக சார் பதிவாளா அலுவலகத்தில் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார். என் மனைவி எழுதிக்கொடுத்த பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது என்பது எனக்கு தெரியாது. சாட்சி கையெழுத்து போட்ட பக்தாவசலம் என்பவா எனக்கு தெரியும் அவர் என் சித்தப்பா ஆவார். அவருக்கு எழுதப்படிக்க தெரியும். அவர் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். பவர் பத்திரத்தில் வங்கி கடனுக்காக தான் எழுதப்பட்டது என்பதை குறிப்பிடவில்லை என்றால் அந்த பத்திரத்தை அவரே தான் எழுதிக்கொண்டார். 1ம் பிரதிவாதிக்கு என் மனைவி தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த சமயத்தில் நானும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிந்தேன் என்றால் சரியல்ல.

2) பக்தாவசலம் அந்த பத்திரத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் என்னிடம் சொல்லவில்லை. 2ம் பிரதிவாதி 27.05.2016 அன்று காலமானார்.

அவர் இறப்பதற்கு முன்பு வாதி எனக்கு எந்த வித அறிவிப்பும் அனுப்பவில்லை. எனக்கு நீதிமன்றத்திற்கு மூலம் சம்மன் வந்த பின்பு நான் இந்த வழக்கை பற்றி தெரியும். வாதி 2ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்பே எனக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பத்திரம் எழுதிக்கொடுத்த சமயத்தில் யார் யார் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது. 4 முதல் 8 பிரதிவாதிகள் அன்றைய தினம் சென்றிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி இறந்த பின்பு தாவா சொத்தின் வில்லங்கம் எடுத்து பார்த்தேன். லோன் வாங்குவது சம்மந்தமாக தான் நான் வில்லங்கம் பார்த்தேன்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.01.23 15:32:25 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.